6-6-2018 அன்று 33.71 இலட்சம் லிட்டர் பாலும், இதுவரையில்லாத அதிக அளவாக கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து விவசாயிகள் நலனை ஆவின் நிறுவனம் பாதுகாத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

## (எ) விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. அய்யாக்கண்ணு கைது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன செய்தியை தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கென்று ஓர் அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூடுவதற்கும், பேசுவதற்கும் மட்டுமல்ல; பாதிக்கப்பட்டவர்கள், அரசாங்கத்திடம் ஏதேனும் உதவி பெற விரும்புபவர்கள்கூட அங்கு வந்து சந்தித்து மனு கொடுப்பார்கள். இது வாழையடி வாழையாக நடந்துவருகிற விஷயம்தான். அதேபோல், இன்று விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. அய்யாக்கண்ணு அவர்கள், எதிர்க்கட்சித் தலைவரைப் பார்க்க விரும்பினார்கள். எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் 12 மணிக்கு சந்திப்பதற்கு நேரம் கொடுத்திருந்தார். அதற்காக வந்த திரு. அய்யாக்கண்ணு அவர்களை போலீஸ்காரர்கள் மடக்கிப் பிடித்து, எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கவிடாமல் செய்ததோடு மட்டுமல்லாமல், அவரை அழைத்துக் கொண்டு போய் வடபழனி காவல் நிலையத்தில் வைத்திருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்று புரியவில்லை. விவசாயிகள் சங்கத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவரைப் பார்க்க வருகிறார். குறைகள் சொல்லிவிட்டுப் போவார். அந்தக் குறைகளில் நியாயம் இருந்தால் நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப் போகிறோம். இல்லாவிட்டால், நாங்களும் அமைதியாக இருக்கப் போகிறோம். இப்படி எதிர்க்கட்சித் தலைவரைப் பார்க்க வந்தவரை, பார்க்கவிடாமல் வழியிலே பிடித்து, அடித்து—இல்லை, அடிக்கவில்லை மடக்கிப் பிடித்து. . .* (சிரிப்பு)

*2018 ஜூன் 7]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வழக்கமாகச் சொல்வதைப்போல், அப்படியே சொல்லிவிட்டீர்கள்போல. (சிரிப்பு)*

**திரு. துரைமுருகன்:** *அவரை வடபழனி காவல் நிலையத்தில் வைத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது என்ன என்று பார்க்கலாம். உட்காருங்கள். என்ன என்று விசாரிக்கலாம்.*

**THIRU DURAIMURUGAN:** I am expecting something from you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது என்ன என்று விசாரிக்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு)*

**(ஏ) மாவட்ட காஜிக்களுக்குத் தொகுப்பூதியம் வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தல்-மீதமுள்ள காஜிக்களுக்கும் வழங்க வேண்டுதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்வதற்காகத்தான் வாய்ப்பு கேட்டேன், வேறொன்றுமில்லை. 30 வருட காலமாக நாங்கள் சொல்லி வந்த ஜமாத்களாக இருக்கக்கூடிய பள்ளிவாசல்களினுடைய திருமணங்கள் மற்ற காரியங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தக்கூடிய காஜிக்களுக்கு தொகுப்பூதியம் வழங்க வேண்டுமென்று இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பாக நீண்ட நாள் கோரிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக எங்களுடைய தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். அதை இந்த அரசாங்கம் மிகுந்த பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில், மாவட்ட காஜிக்கள் 7 பேருக்கு ரூ.20,000/- தொகுப்பூதியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வழங்கியிருக்கின்றார்கள். அதற்காக, அவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகவும், சமுதாயத்தின் சார்பாகவும் உலாமாக்களின் சார்பாகவும் எங்களுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பண்டிகைக் காலம் வருவதால் 7 பேருக்கு வழங்கியிருக்கின்றீர்கள். மீதியுள்ள காஜிக்களுக்கும் அந்தத் தொகையை விரைவாக வழங்க வேண்டுமென்று உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.*